<u>**வாக்குமூலம்**</u>
<u>**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**</u>
<u>**வழக்கு எண் : SC.No. 325/2024**</u>
<u>**வழக்கு சாட்சி PW- 13**</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | முத்துக்கிருஷ்ணன் | **தாலுகா** | : | |
| **தந்தை பெயர்** | : | ராமையா | **தொழில்** | : | உதவி ஆய்வாளர் |
| **கிராமம்** | : | தென்காசி | **வயது** | : | 34 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Wednesday of 23.07.2026.

**( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**முதல் விசாரணை –**

நான் தற்போது தென்காசி மாவட்ட தனிப்பிரிவு காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் இலத்தூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 20.11.2019 ம் தேதி நிலைய பொறுப்பில் இருந்தபோது, தென்காசி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற தகவலை பெற்று, அங்கு சிகிச்சையில் இருந்த ரேவதி என்பவர் தீவிர சிகிச்சையில் இருந்ததால் அவருக்கு உதவியாக இருந்த முருகன் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை 15 மணிக்கு பெற்று, 15.15 மணிக்கு நிலையம் வந்து அதன் தன்மைப்படி காவல் நிலைய குற்றஎண்.268/2019, சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 307, 506(2) இதச மற்றும் பிரிவு 4 TNPWH வின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, அதன் அசலை செங்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கும்

வைத்தேன். நான் பதிவு செய்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.12 ஆகும்.** காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.24 15:59:49 +0530